# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.44/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நர்மதா | க-பெ | அஸ்வின் |
| ஊர்: | : | திண்டுக்கல் | | |
| வயது: | : | 34/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி பேராசிரியை, தேனி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை. | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.07.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் திண்டுக்கல்லில் வசித்து உதவி பேராசிரியையாக தேனி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணி செய்து வருகிறேன். நான் காரைக்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவ அலுவலராக 07.09.2017 அன்று பணியில் இருந்த போது 5.10 மணிக்கு காரைக்குடியை சேர்நத் சித்தி ஆயுசா என்பவர் சிகிச்சைக்காக தானாக வந்தார். அவரை விசாரணை செய்த போது அன்றைய தினம் இரவு 11.30 மணியளவில் அவருடைய வீட்டில் வைத்து 3 அடையாளம் தெரிந்த மற்றும் 4 அடையாளம் தெரியாத நபர்கள் மரக்குச்சியால் தன்னை தாக்கியதாக சொன்னார். அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. தலைச்சுற்றல் இருந்தது. CT Brain எடுப்பதற்காக நான் பரிந்துரை செய்தேன். அதன் பின்னர்அவர் சிகிச்சைக்கு என்னிடம் வரவில்லை. ஆகையால் அவருடைய காயம் குறித்து என்னால் கருத்துரை வழங்க இயலவில்லை. **விபத்து பதிவேடு அ.சா.ஆ.10**.

இதே வழக்கில் தொடர்புடைய மற்றொறு நபர் உமர் பரூக் என்பவர் தன்னிச்சையாக சிகிச்சைக்கு என்னிடம் அன்றைய தினம் 5.05 மணியளவில் வந்தார் அவரை விசாரணை செய்த போது 3 அடையாளம் தெரிந்த மற்றும் 4 அடையாளம் தெரியாத நபர்கள் மரக்குச்சியால் தன்னுடைய வீட்டில் வைத்து தாக்கியதாக சொன்னார். அவருக்கு 2 x 1 cm சிதைந்த காயம் கீழ் உதட்டில் இருந்தது 2 x 3 cm அளவிலான சிறாய்பு காயம் அவருடைய இடது முழுங்கால் பகுதியில் இருந்தது அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரன வகையை சேர்ந்தது என்று நான் சான்று அளித்தேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அ.சா.ஆ.11**.

## குறுக்கு விசாரணை

உமர் பரூக் அவருக்கு ஏற்பட்ட காயமானது அவர்களாகவே கல் தடுக்கி தடுமாறி தலைகீழாக விழுந்தால் மேற் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

சித்திக் ஆயுசா என்பவர் தான் சொல்வது பொய் என்று தெரிந்துவிடும் என்ற காரணத்திற்காக விடுவிப்பு செய்து செல்ல வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.10 11:18:44 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.